

## *புனித 7-ம் கிரகோரியார்*

இவரின் இயற்பெயர் கில்டர்பிராண்டு. இவர் தஸ்கனிலுள்ள சோனாவில் 1020-ல் பிறந்தார். இவர் புனித ஆசீர்வாதப்பரின் சபையில் சேர்ந்து சந்நியாசியான சிறிது காலத்திற்குப்பின் மடத்தின் உபதலைவரானார். பாப்பு இவரை உரோமைக்கு அழைத்தார். இவரது புண்ணிய வாழ்வையும் கல்வியறிவையும் கண்டு அனைவரும் அதிசயித்தார். இவரது முயற்சியினால் ஒரு மட்தின் சந்நியாசிகள் சீர்திருந்தி புகழ் பெற்றனர். ஆறு பாப்புகளுக்கு இவர் ஆலோசகராக இருந்தார். இறுதியாக இவர் 1073-ல் பாப்புவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். திருச்சபையின் சுதந்திரத்திற்காக இவர் விடாது போராடினார். ஆயர்களையும் மாடதிபதிகளையும் நியமிப்பதில் அரசர்கள் உரிமை பாராட்டியதை இவர் ஒழித்துக் கட்டினார். திருச்சபையின் பதவிகளை விலைக்கு வாங்குவதை இவர் தடுத்தார். திருச்சபையின் பதவிகளை தகுதியற்றவர்களுக்கு வழங்கிய அரசனை இவர் திருச்சபைக்கு புறம்பாக்கினார். அவனோ இவரைத் துன்புறுத்தி, கொல்ல வழிதேடினான். ஒருவரை எதிர் பாப்புவாக நியமித்து திருச்சபைக்குத் தொல்லை கொடுத்து வந்தான். அவன் இராணுவத்துடன் உரோமைக்குச் சென்று பாப்பு இருந்த இடத்தை முற்றுகையிட்டான். கோமகன் ஒருவர் குறிக்கிட்டு அவனை பின்வாங்கச் செய்தார். பாப்புவுக்கு எந்தநேரத்திலும் ஆபத்து நேரிடலாம் என்று பயந்த அந்தகோமகன் அவரை வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றான். சாகுந்தறுவாயில் இருந்த அவர் “நான் நீதியை நேசித்தேன். அக்கிரமத்தை பகைத்தேன். அதற்காக இப்பொழுது நான் பரதேசத்தில் சாகிறேன்” என்றார். அப்பொழுது அருகில் நின்ற ஒருவர் அவரை நோக்கி “பரிசுத்த தந்தையே, எந்த நாடும் உமக்கு பரதேசமாகாது, ஏனெனில் அகில உலகத்தையும் கடவுள் உம் ஆட்சிக்கு உட்படுத்தியிருக்கிறார்” என்றார்.

**சிந்தனை:**

உண்மையை நேசித்து தீமையைப் பகைக்கிறவர்களுக்கு இவ்வுலகில் உபத்திரவங்கள் ஏராளமாக வரும்.

**செபம்:**

பரிசுத்த ஆவியே! திருத்தந்தைக்கு உமது ஒளியை நிரம்பக் கொடுத்தருளும்.